7. List மற்றும் Dictionary இடையே உள்ள வேறுபாடு யாது?

| List | Dictionary |
|---|---|
| • வரிசைப்படுத்தப்பட்ட உறுப்புகளின் தொகுப்பாகும். | ஒரு உறுப்பை மற்றொரு உறுப்புடன் பொருத்த பயன்படும் தரவு அமைப்பு ஆகும். |
| • சுட்டெண் உறுப்பை அணுகுவதற்கு பயன்படுகிறது. | சுட்டெண் திரவுகோலை குறிக்கிறது. |
| • மதிப்பை பார்த்துக் கொள்ள பயன்படுகிறது. | ஒரு மதிப்பை எடுத்துக் கொண்டு மற்றொரு மதிப்பை பார்த்துக் கொள்ள பயன்படும். |

## பாடம் - 10
## பைத்தான் இனக்குழுக்கள் மற்றும் பொருள்கள்

1. இனக்குழு என்றால் என்ன?

- ❖ இனக்குழு என்பது பொருளின் வார்ப்புரு (Tup) ஆகும்.
- ❖ இனக்குழு பைத்தானில் மிக முக்கிய கட்டமைப்பு கூறுகளாகத் திகழ்பவையாகும்.
- ❖ இனக்குழு Class என்னும் சிறப்புச் சொல்லின் தொடங்கி ( : ) முக்காற் பள்ளியை கொண்டு முடியும்.
- ❖ இதில் வரையறுக்கப்படும் அனைத்து மாறிகளும் பொருளாக எடுத்துக் கொள்ளும்.

2. இனக்குழுவை எவ்வாறு வரையறுப்பாய்?

- ❖ இனக்குழுவை வரையறுக்க “Class” என்னும் சிறப்புச் சொல் பயன்படுகிறது.
- ❖ ஒவ்வொரு இனக்குழுவும் தனித்த பெயருடன் முக்காற்புள்ளி ( : ) யைக் கொண்டு முடியும்.
- ❖ கூற்று என்பது மாறி (or) தேர்ந்தெடுப்பு (or) மடக்கு அல்லது செயற்கூறு வரையறையாக இருக்கலாம்.

பொதுவடிவம் :-

```
class class – name
statement 1
statement 2
statement n
```

- ❖ இனக்குழு மாறிகள் மற்றும் வழிமுறை சேர்த்து இனக்குழு உறுப்பு எனப்படும்.
- ❖ இனக்குழு உறுப்புகளை பொருள் (or) சான்றுருக்கள் மூலமாகவே அணுகுதல் வேண்டும்.

எ.கா

```
class mark
t, e = 50, 70
```



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

3. பைத்தானில் ஆக்கிகள் பற்றி விளக்கு?

- ❖ ஓர் இனக்குழுவின் சான்று பயன்பாட்டிற்கு வரும்போது ஆக்கி எனும் சிறப்புச் செயற்கூறு தானாக இயக்கப்படும்.
- ❖ பைத்தானில் "init" என்னும் சிறப்பு செயற்கூறு ஆக்கியாக செயல்படுகிறது.
- ❖ ஆக்கி இரட்டை அடிக்கீறில் தொடங்கி இரட்டை அடிக்கீறலுடன் முடியும்.

பொதுவடிவம் :-

- init – (self, [args ...]):
  statements

- ❖ பொருள் உருவாக்கப்பட்டவுடன் ஆக்கி தானாக இயங்கும்.
- ❖ இது அளபுருக்களுடனோ (or) இல்லாமலோ வரையறுக்கலாம்.

4. அழிப்பி என்றால் என்ன?

- ❖ இனக்குழுவில் உருவாக்கப்பட்ட பொருளின் பயன்பாடு முடிவுக்கு வரும் போது அழிப்பி செயற்கூறு தானாகவே இயக்கப்படும்.
- ❖ ஆக்கிக்கு முரணானது

பொதுவடிவம் :-

___ del ___ ( )

- ❖ நிரல் முடிந்த பின்பு நினைவகத்தில் உள்ள மதிப்புகளை அழிக்க பயன்படுகிறது.

5. Public மற்றும் Private தரவு உறுப்புகள் இடையே உள்ள வேறுபாடு கூறு.

| Public | Private |
|---|---|
| • Public மாறிகள் நிரலில் எங்கு வேண்டுமானாலும் அணுக முடியும். | Private மாறிகள் இனக்குழுவிற்கு உள்ளே மட்டும் அணுக முடியும். |
| • மாறிகள் புள்ளி செயற்குறி ( . ) முன்னொட்டாக கொண்டிருக்கும். | மாறிகள் இரட்டை அடிக்கீறலை (-) முன்னொட்டாக கொண்டிருக்கும். |
| • பொது மாறிகள் என்று அழைக்கலாம் | இவற்றை இனக்குழு மாறிகள் எனவும் அழைக்கலாம். |

ஒரு மதிப்பெண் வினா :-

1. பைத்தான் ஒரு <u>பொருள் நோக்கு நிரலாக்க</u> மொழி ஆகும்.
2. இனக்குழு உறுப்பு <u>புள்ளி ( . )</u> செயற்குறி மூலம் அணுகலாம்
3. தானாக இயக்கப்படும் செயற்கூறு ஆக்கி <u>(or) – init – ( )</u>
4. Private இனக்குழுவின் முன்னொட்டு (__) இரட்டை அடிக்கீறல் ஆகும்.
5. பொருளை உருவாக்கும் செயல்முறை <u>ஆக்கி</u> ஆகும்.



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

திரு.S.நெடுஞ்செழியன் M.Sc., B.Ed., M.Phil., கணினி ஆசிரியர் (PTA) அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மணலூர்பேட்டை, கள்ளக்குறிச்சி மாவட்டம்.

## பாடம் - 11
## தரவுதள கருத்துருக்கள்

1. தரவு என்றால் என்ன?
   - ❖ பல வழிகளில் திரட்டப்படும் அடிப்படை செய்து துணுக்கு தரவு ஆகும். இது செயல்படுத்தப்படாத தரவு ஆகும்.
   - ❖ தரவு எழுத்து, உரை வார்த்தை (or) எண்ணாக இருக்கலாம்.

     எ.கா School, Name, Class, Section

2. தகவல் என்றால் என்ன?
   - ❖ பல தரவுகள் ஒன்று சேர்ந்து ஒரு தகவலாக மாற்றப்படுகிறது. இது செயல்படுத்தப்பட்ட தரவு ஆகும்.
   - ❖ தகவல் என்பது ஒரு முழுமையான தகவல் ஆகும்.

     எ.கா School, Name, Class, Section
   - ❖ ஒரு மாணவர்களின் விவரத்தை அளிக்கிறது.

3. வினவல் மொழி என்றால் என்ன? எ.கா தருக.

   தரவு தளத்திலிருந்து தரவுகளை எளிமையாக பெறவும், சேர்க்க நீக்க, புதுப்பிக்க பயன்படும் மொழியை வினவல் மொழி என்கிறோம்.

   (எ.கா) DBMS

4. தரவுதள மேலாண்மை அமைப்பின் பண்புகள் யாவை?
   - ❖ தரவுகளை அட்டவணையில் உறவுகளின் அடிப்படையில் சேமிக்க பயன்படுகிறது.
   - ❖ DBMS தரவுகளை பிரத்தாளும் இயல்பு நிலையைப் பின்பற்றி தேவையற்ற தரவுகள் மீண்டும் இடம்பெறுவதை குறைக்கும்.
   - ❖ தரவுகளின் நிலைத்தன்மையை DBMS கையாளுகிறது.
   - ❖ பல பயனர்கள் ஒரே நேரத்தில் வேலை செய்ய அனுமதிக்கிறது.
   - ❖ ஒரு எளிய வினவல் மொழியாகவும், தரவு பாதுகாப்பையும் அளித்து பல்புரியாக்க பரிவர்த்தனையை ஆதரிக்கிறது.

5. DBMS-ன் பயன்கள் (நிறைகள்) யாவை?
   - ❖ பயன்பாட்டு நிரல்களைப் பிரித்தல்
   - ❖ தரவு மிகையை (Duplication) குறைத்தல்
   - ❖ வினவல் மொழி மூலம் தரவை எளிமையாக திரும்ப பெறுதல்
   - ❖ தரவை உருவாக்கும் நேரம் மற்றும் பராமரித்தலைக் குறைத்தல்.

6. தரவுதள மேலாண்மை அமைப்பின் (DBMS) கூறுகள் யாவை?

   5 வகைப்படும்.
   1. வன்பொருள்
   2. மென்பொருள்
   3. தரவு
   4. வழிமுறைகள் / செயல்முறைகள்
   5. தரவுதள அணுகல் மொழிகள்.



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

திரு.S.நெடுஞ்செழியன் M.Sc., B.Ed., M.Phil., கணினி ஆசிரியர் (PTA) அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மணலூர்பேட்டை, கள்ளக்குறிச்சி மாவட்டம்.

7. தரவு மாதிரியின் பயன்கள் யாவை?

- சிக்கலான நிகழ் உலக தரவு சேகரிக்கும் சூழலை எளிமையாக்குகிறது.
- தரவு மாதிரியின் முக்கிய நோக்கம். இறுதி மென்பொருள் அதன் முழுமையான உருவாக்கத்திற்கு பிறகு எவ்வாறு இருக்கும் என்பதற்கான ஒரு மாதிரியை தருகிறது.

8. தரவு மாதிரியின் வகை யாவை? விவரி?

தரவு மாதிரி ஐந்து (5) வகைகள் உள்ளன.

1. படிநிலை தரவுதள மாதிரி
2. உறவுநிலை தரவுதள மாதிரி
3. வலையமைப்பு தரவுதள மாதிரி
4. ER தரவுதள மாதிரி
5. பொருள் நோக்கு தரவுதள மாதிரி.

1. படிநிலை மாதிரி :-

- படிநிலை மாதிரியில் தரவு எளிமையான மரக்கிளை அமைப்பில் குறிப்பிடப்படுகிறது.
- ஒன்றிலிருந்து பல அதாவது பெற்றோர் குழந்தை உறவு நிலையை குறிக்கிறது.




2. உறவுநிலை மாதிரி :-

- E.F காட் என்பவரால் உருவாக்கப்பட்டது?
- தரவுகளின் அடிப்படையில் கட்டமைப்பு அட்டவணைகள் உறவுகளை குறிக்கிறது?
- குறிப்பிட்ட வகையை சார்ந்த அனைத்து தகவலும் அட்டவணை வரிசையில் சேமிக்கப்படுகிறது.
- எனவே அட்டவணைகளை உறவுநிலை தரவுதள மாதிரிகள் என்கிறோம்.
- தரவுகளை தனித்தன்மையுடன் குறிக்கும் ஒரு பண்புக்கூறு ஆகும்.

3. வலையமைப்பு மாதிரி :-

- வலையமைப்பு தரவுதள மாதிரி படிநிலை தரவுத்தள மாதிரியின் விரிவாக்கப்பட்ட அமைப்பாகும்.






Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



4. ER தரவுதள மாதிரி :-

- பொருளை உருப்படியாகவும் (Object) அதன் பண்புகளை பண்புக்கூறுகளாகவும் பிரித்து உறவுநிலை உருவாக்கப்படுகிறது.
- ER மாதிரியைக் கொண்டு நிரலா் அமைப்பை எளிமையாக புரிந்து கொள்ள முடியும். செவ்வகம் உருப்படிகளை குறிக்கும் நீள்வட்டம் பண்புக்கூறுகளை குறிக்கும். டைமண்ட் ER படங்களின் உறவுநிலையைக் குறிப்பிடுகிறது.




5. பொருள் நோக்கு தரவுதள மாதிரி :-

- தரவை பொருள்கள், பண்புக்கூறுகள், வழிமுறைகள் இனக்குழு மற்றும் மரபுரிமம் போன்ற வழியில் சேமிக்கிறது.
- மிகவும் சிக்கலான பயன்பாடுகளை தெளிவான கூறுநிலை அமைப்பை எளிதாக பராமரிக்கவும் மாற்றி அமைக்கவும் பயன்படுகிறது.
- Circle Retangle மற்றும் Triangle ஆகிய பொருள்கள் Shape என்ற பொருளில் இருந்து தருவிக்கப்பட்டது.




10. DBMS மற்றும் RDBMS-க்கும் இடையேயான வேறுபாடு கூறு?

| **DBMS** | **RDBMS** |
|---|---|
| • தரவுதள மேலாண்மை அமைப்பு | உறவுநிலை தரவுதள மேலாண்மை அமைப்பு |
| • ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட பதிவுகளின் தரவுகள் | அட்டவணையில் வரிசை மற்றும் நெடுவரிசை உள்ள தரவுகள் |
| • தரவை அணுக அதிக நேரம் எடுத்துக் கொள்ளும் | தரவை அணுக DBMS-ஐ விட குறைவு |
| • பரிவர்த்தனை திறமையற்றது பிழைகளை கொண்டது பாதுகாப்பற்றது | பரிவர்த்தனை திறமையானது மற்றும் பாதுக்காப்பானது. |
| • (எ.கா) Dbase, Foxpro | (எ.கா) SQL Server, SQ Lite |



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



11. உறவு நிலைகளின் வகைகளை விவரி?

4 வகையாக உறவு நிலைகள் உள்ளன.

1. ஒன்றுடன் ஒன்று உறவுநிலை
2. ஒன்றுடன் பல உறவுநிலை
3. பலவற்றுடன் ஒன்று உறவுநிலை
4. பலவற்றுடன் பல உறவுநிலை

1. ஒன்றுடன் ஒன்று உறவுநிலை :-

- ஒரு பொருள் வேறு ஒரு பொருளுடன் மட்டுமே தொடர்பு கொண்டிருக்கும்.
- ஒரு அட்டவணையின் ஒரு பதிவு மற்றொரு அட்டவணையில் ஒரு பதிவுடன் மட்டும் இணைக்கப்பட்டிருக்கும்.




2. ஒன்றுடன் பல உறவுநிலை :-

- ஒருபொருள் வேறு பல பொருள்களுடன் தொடர்பு கொண்டிருக்கும்.
- அட்டவணை ஈவின் ஒரு பதிவு அட்டவணை B-யின் பல பதிவுகளுடன் தொடர்பு கொண்டிருக்கும்.




3. பலவற்றுடன் ஒன்று உறவுநிலை :-

இந்த உறவுநிலையில் பல பொருள்கள் வேறு ஒரேயொரு பொருள்களுடன் மட்டுமே தொடர்பு கொண்டிருக்கும்.




4. பலவற்றுடன் பல உறவுநிலை?

ஒரு அட்டவணையில் உள்ள பல பதிவுகள் மற்றொரு அட்டவணையில் உள்ள பல பதிவுகளுடன் தொடர்பு கொண்டிருக்கும்.



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com




ஒரு மதிப்பெண் :-

1. DBMS-ன் விரிவாக்கம் Date Base Management System

2. DBMS-ல் ஒரு வரிசை tuple என்று அழைக்கப்படுகிறது.

3. தரவுதள நிர்வாகி DBA (Data Base Administrator)

4. தரவுதள இயல்பாக்கம் RDBMS உருவாக்கியவர் EF Codd காட்

5. SQL விரிவாக்கம் Structured Query Language

6. மரக்கிளை போன்ற கட்டமைப்புடையது படிநிலை மாதிரி

7. SELECT கூறுக்கு பயன்படும் சின்னம் Ő

8. ER தரவுதள மாதிரியை உருவாக்கியவர் Chen

## பாடம் - 12
## வினவல் அமைப்புமொழி

1. SQL என்றால் என்ன?
- ❖ SQL என்பது ஒரு வினவல் அமைப்பு மொழியாகும்.
- ❖ SQL தரவுதளங்களை உருவாக்க, திரும்ப எடுக்க மாற்றி அமைக்க மற்றும் தகவல்களை பரிமாற்றம் செய்யவும் பயன்படுகிறது
- ❖ தரவு தளத்தை நிர்வகிக்கவும், அணுகவும் பயன்படும்.

2. தரவுத்தளம் என்றால் என்ன?

- ❖ தரவுத்தளம் என்பது தொடர்புடைய தரவுகளை கொண்ட அட்டவணையின் தொகுப்பை கொண்ட ஒரு களஞ்சியம் எனப்படும்.
- ❖ தரவுகளை கணினியில் மின்னனு முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டு சேமிக்கும் அமைப்பிற்கு தரவுதளம் என்று பெயர்.
  எ.கா மாணவர்களின் வருகை பதிவேடு.

3. SQL-ன் பல்வேறு செயலாக்க திறன்களை யாவை?

   1. தரவு வரையறை மொழி (DDL)

   2. தரவை கையாளுதல் மொழி (DML)

திரு.S.நெடுஞ்செழியன் M.Sc., B.Ed., M.Phil., கணினி ஆசிரியர் (PTA) அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மணலூர்பேட்டை, கள்ளக்குறிச்சி மாவட்டம்.

3. உட்பொதிக்கப்பட்ட தரவுக் கையாளுதல் மொழி (EDML)
4. View வரையரை (View கட்டளை)
5. அங்கீகாரம்
6. ஒருமைப்பாடு
7. பரிவர்த்தனை கட்டுப்பாடு.

4. தரவுத்தளத்தை எவ்வாறு உருவாக்குவாய்?

- தவுதளத்தை உருவாக்க CREATE கட்டளை பயன்படுகிறது.
- பொது வடிவம் CREATE DATABASE database – Name;
- தரவு தளத்துடன் செயலாற்ற USE DATA BASE

(எ.கா) மாணவர் தரவுதளத்தை உருவாக்க.

CREATE DATABASE Stud;

5. SQL கட்டளையின் கூறுகள் எத்தனை? அவை யாவை?

SQL கட்டளைகள் 5 வகைப்படும்.

1. DML - தரவு கையாளும் மொழி
2. DDL - தரவு வரையறை மொழி
3. DCL - தரவு கட்டுப்பாட்டு மொழி
4. TCL – பரிவர்த்தனை கட்டுப்பாட்டு மொழி
5. DQL - தரவு வினவல் மொழி

6. தரவு வரையறை (DDC) மொழியின் கட்டளைகள் மற்றும் அதன் பயன்கள் யாவை?

4 கட்டளைகள் உள்ளன.

- CREATE - தரவுத்தளத்தில் அட்டவணைகளை உருவாக்க பயன்படுகிறது
- ALTER - தரவுத்தளத்தின் வடிவமைப்பை மாற்றி அமைக்க பயன்படுகிறது
- DROP - தரவுத்தளத்தில் உள்ள அட்டவணைகளை நீக்க பயன்படுகிறது.
- TRUNCATE - ஒரு அட்டவணையில் உள்ள அனைத்து பதிவுகளையும் அழிக்கவும் மற்றும் அவற்றுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தையும் விடுவிக்கும்.

7. தரவுகளை எவ்வாறெல்லாம் கையாள முடியும்?

தரவுகளை கையாள DML மொழி பயன்படுகிறது.

- தரவுத்தளத்தில் புதிய தகவலை சேர்த்தல்.
- சேமித்து வைக்கப்பட்டுள்ள தகவல்களை திரும்ப பெறுதல்



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

- ❖ வேண்டாத தகவல்களை நீக்குதல்
- ❖ தரவுகளை மாற்றி அமைத்தல்.

8. தரவு கையாளும் மொழியின் (DML) கட்டளையின் பயன்கள் யாவை?

- ❖ INSERT - ஒரு அட்டவணையில் தரவுகளை நுழைத்தல்
- ❖ UPDATE - அட்டவணையில் ஏற்கனவே உள்ள தரவுகளை புதுப்பித்தல்
- ❖ DELETE - அட்டவணையில் உள்ள அனைத்து பதிவுகளையும் நீக்கும் ஆனால் நினைவக பகுதியை விடுவிக்காது.

9. தரவு கட்டுப்பாட்டு மொழி என்றால் என்ன? கட்டளையின் செயல்பாடு என்ன?

- ❖ தரவு கட்டுப்பாட்டு மொழி என்பது தரவு தளத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ள தரவுகளின் அணுகுநிலை கட்டுப்படுத்தும் நிரலாக்க மொழியாகும்.
- ❖ GRANT - ஒரு குறிப்பிட்ட பணியை செய்ய ஒன்று (or) பல பயனர்களுக்கு அனுமதி வழங்கும்.
- ❖ REVOKE - Grant கட்டளையினால் தரப்பட்ட அணுகல் அனுமதி திரும்பப் பெறப்படும்.

10. பரிவர்த்தனைக் கட்டுப்பாடு மொழி என்றால் என்ன? கட்டளையின் செயல்பாடுகள் யாவை?

தரவு தளத்தில் உள்ள பரிவர்த்தனைகளை (TCL) நிர்வகிக்க பரிவர்த்தனை கட்டுப்பாட்டு மொழி பயன்படுகிறது.

- ❖ Commit - தரவுத்தள பரிவர்த்தனையை நிரந்தரமாக சேமிக்கும்
- ❖ Roll Back - ஒரு தரவுத்தளத்தை முந்தைய Commit நிலைவரை மீட்டெடுக்கும்
- ❖ Save Point - Rollback செய்வதற்கு ஏதுவாக தரவுத்தள பரிவர்த்தனையை தற்காலிகமாக சேமிக்கும்.

11. தரவு தளத்தில் ஓர் அட்டவணையை உருவாக்கும் முறையை விவரி? (or) மாணவர் தரவுத்தளத்தை உருவாக்கும் முறையை விவரி?

- ❖ CREATE TABLE என்ற கட்டளையை பயன்படுத்தி ஒரு அட்டவணையை உருவாக்கலாம்.
- ❖ ஒரு அட்டவணையை உருவாக்கும் போது அதன் நெடுவரிசைகளுக்கு பெயரிட்டு, தரவு வகைகளையும் அளவினையும் குறிப்பிட வேண்டும்.
- ❖ ஒரு அட்டவணையின் குறைந்தது ஒரு நெடுவரிசையாவது இருக்க வேண்டும்.

பொதுவடிவம் :-

```
CREATE TABLE < Table Name>

(< Column Name> <Data Type> [ (Size> ]

<Column Name> <Date Type> [ Size>]);
```



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

திரு.S.நெடுஞ்செழியன் M.Sc., B.Ed., M.Phil., கணினி ஆசிரியர் (PTA) அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மணலூர்பேட்டை, கள்ளக்குறிச்சி மாவட்டம்.

எ.கா. CREATE TABLE கட்டளையை பயன்படுத்தி மாணவர்களின் சே.எண், பெயர், பாலினம், வயது, ஊர் போன்ற விவரங்களின் அடிப்படையில் ஒரு அட்டவணையை உருவாக்கலாம்.

CREATE TABLE Student

(Admno Integer, Name Char (20), Gender

Cher (1), Age integer, Place Char (10);

12. Unique கட்டுப்பாடு விளக்கு?

- ❖ தரவுதள அட்டவணையில் ஒரு குறிப்பிட்ட நெடுவரிசையில் உள்ள மதிப்புகள் இருவரிசைகளும் ஒரே மதிப்பை கொண்டிருக்காது என்பதை உறுதி செய்கிறது.
- ❖ அட்டவணையில் NOTNULL (மதிப்பு இல்லாமல்) இருக்கக்கூடாது.
- ❖ அட்டவணையில் UNIQUE (தனித்தனியான மதிப்புகள்) உடையதாக இருக்க வேண்டும்.

13. Primary Key விளக்கு.

- ❖ தரவுத்தளத்தில் ஒரு பதிவை தனித்தன்மையோடு அடையாளம் காட்ட ஒரு புலத்தினை Primary Key என்று அழைக்கப்படுகிறது.
- ❖ இதில் ஒரே ஒரு புலத்தை மட்டுமே Primary Key என குறிப்பிட முடியும்.
- ❖ NULL என்ற மதிப்பை அனுமதிக்காது.
  எ.கா Exam No.

14. DELETE கூற்று என்றால் என்ன?

- ❖ DELETE கட்டளை Where Clause-ல் கொடுக்கப்பட்ட நிபந்தனை அடிப்படையில் அட்டவணையில் உள்ள குறிப்பிட்ட வரிசை (or) அனைத்து வரிசைகளையும் நீக்கும்.
- ❖ அட்டவணைக்கு ஒதுக்கப்பட்ட இடத்தை விடுவிக்காது.

15. ROP கூற்று என்றால் என்ன?

- ❖ DROP கட்டளை தரவு தளத்திலிருந்து ஒரு உறுப்பை நீக்க பயன்படுகிறது.
- ❖ DROP கட்டளை அட்டவணையின் உள்ள அனைத்து வரிசைகளும் நீக்கப்பட்டு, அட்டவணையின வடிவமைப்பு தரவுதளத்திலிருந்து நீக்கப்படும்.
- ❖ DROP செய்த அட்டவணையை திரும்பப்பெற இயலாது.

ஒரு மதிப்பெண் :-

1. அட்டவணையில் உள்ள பதிவுகளை வடிகட்ட WHERE Clause பயன்படுகிறது.
2. தரவுதளத்தில் ஒரு அட்டவணையை நீக்க DROP TABLE கட்டளை பயன்படுகிறது.
3. தரவை தரவுதளத்தில் நிரந்தரமாக சேமிக்க COMMIT கட்டளை உதவுகிறது.
4. அட்டவணையில் வரிசையை நீக்க DELETE கட்டளை பயன்படுகிறது.
5. SQ-ல் உள்ள தரவு கட்டுப்பாட்டு மொழியின் கட்டளைகள் GRANT, REVOKE ஆகும்.



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

திரு.S.நெடுஞ்செழியன் M.Sc., B.Ed., M.Phil., கணினி ஆசிரியர் (PTA) அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மணலூர்பேட்டை, கள்ளக்குறிச்சி மாவட்டம்.

6. அட்டவணையில் வேலை செய்ய GRANT கட்டளை அனுமதி வழங்கும்.
7. ஒப்பீடு மற்றும் தடுக்க செயற்குறிகளை வரையறுக்க CHECK பயன்படுகிறது.
8. Primary Key உள்ள புலத்தில் உள்ள உறுப்புகள் வெற்று (NULL) மதிப்புகளை அனுமதிக்காது.
9. அட்டவணையில் உள்ள அனைத்து வரிசைகளையும் நீக்க TRUNCATE பயன்படுகிறது.

## பாடம் - 13
## பைத்தான் மற்றும் CSV கோப்புகள்

1. எக்ஸெல் (XLS) மற்றும் CSV கோப்புகளுக்கிடையேயான வேறுபாடு கூறு.

| XLS | CSV |
|---|---|
| • தரவுகளை இரு நிலைவடில் கொண்ட கோப்பாகும். | மதிப்புகள் (or) தரவுகள் எளிய உரை வடிவ கோப்பாகும். |
| • XLS கோப்புகளுக்கு உருவாக்கப்பட்ட பயன்பாடுகளை கொண்டு மட்டும் எழுத படிக்க முடியும். | CSV கோப்புகளை Notpad, MS Excel, Open Office போன்றவற்றின் மூலம் எழுத படிக்க முடியும். |
| • கோப்பினை XLS (or) XLSX என்ற வடில் சேமிக்கலாம். | கோப்பினை CSV என்ற வடிவில் சேமிக்கலாம். |
| • அதிக நினைவகம் எடுத்துக்கொள்ளும் | குறைவான நினைவகம் எடுத்துக் கொள்ளும். |

2. CSV என்றால் என்ன? (or) FLAT FILE என்றால் என்ன?

- ❖ CSV என்பது கோப்பில் ஒவ்வொரு வரியும் காற்புள்ளி அல்லது பிரிப்பான்கள் மூலம் பிரிக்கப்பட்ட பல்வேறு புலங்களைக் கொண்டு பயனரால் புரிந்து கொள்ளக்கூடிய உரைக் கோப்பாகும்.
- ❖ ஒவ்வொரு வரியை ஒரு வரிசையாகவும் ஒவ்வொரு புலத்தையும் நெடுவரிசையாக கருதலாம்.
- ❖ CSV செயற்கூறுகளை பயன்படுத்தி CSV கோப்புகளை எழுத படிக்க முடியும்.

3. CSV கோப்பிலுள்ள தரவை வடிவூட்டம் செய்ய பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் யாவை?

- ❖ ஒவ்வொரு வரிசையும் புதிய வரியில் இருந்த அந்த வரியை நுழைவு பொத்தானை அழுத்த வேண்டும்.
- ❖ கோப்பினில் உள்ள கடைசி பதிவானது வரிமுறிவு (or) வரிசெலுத்தி பிரிப்பானைக் கொண்டிருக்கலாம் (எ) இல்லாமல் இருக்கலாம்.
- ❖ சாதாரண பதிவு வரிசைகளின் வடிவங்களின் வரிசையாக கொண்டு தலைப்பு புலங்களின் தொடர்புடைய பெயராக இருக்க வேண்டும்.
- ❖ தலைப்பு மற்றும் பதிவு புலன்கள் காற்புள்ளியால் பிரிக்கப்பட்டிக்க வேண்டும். கடைசி புலத்தை தவிர.
- ❖ புலங்களில் இரட்டை மேற்கோள்குறி கொடுத்தால் மேற்கோள் குறியானது தோன்றும்.



www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

திரு.S.நெடுஞ்செழியன் M.Sc., B.Ed., M.Phil., கணினி ஆசிரியர் (PTA) அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மணலூர்பேட்டை, கள்ளக்குறிச்சி மாவட்டம்.

- ❖ வரிதிருப்பி, காற்புள்ளி, இரட்டை மேற்கோள் குறிக்கோள் கொடுக்க வேண்டும்.

4. பைத்தான் மூலம் CSV கோப்பினை எவ்வாறு படிக்க முடியும்?

- ❖ பைத்தான் மூலம் CSV கோப்பினை படிக்க இரண்டு வழிகள் உள்ளன.

1. CSV தொகுதி படித்தல் செயல்கூறு மூலம் படித்தல்.
2. Dict Reader இனக்குழு பயன்படுத்தி படித்தல்.

5. Reader செயற்கூறு மூலம் CSV கோப்பை படிக்கும் முறையை விளக்கு?

- ❖ CSV Reader ( ) என்ற செயற்கூறு மூலம் CSV கோப்பை படிக்க முடியும்.
- ❖ Reader ( ) செயற்கூறு கோப்பின் வரியை படித்து அதை நெடுவரிசை பட்டியலாக (List) அமைக்கும்.
- ❖ இந்த கூற்றின் மூலம் கோபபின் தரவுகளில் உள்ள மேற்கோள்குறி (" ") , (1) மற்றும் ( 1 ) போன்ற பல்வேறு வடிவமைப்புகளை பயன்படுத்தி படிக்கலாம்.

CSV Reader ( ) செயற்கூறு பொதுவடிவம்

CSV .reader (fileobject, delimiter, fmtparams)

6. புதிய CSV கோப்பினை எவ்வாறு உருவாக்குவாய்?

- ❖ CSV கோப்பினை கீழ்கண்டவாறு உருவாக்கலாம்.
- ❖ மைக்ரோசாப்ட் எக்ஸெல்லில் CSV கோப்பினை உருவாக்க முதலில் File-> New (or) Ctrl + N கிளிக் செய்ய வேண்டும்.
- ❖ கோப்பில் உள்ளிடப்பட வேண்டிய தரவின் ஒவ்வொரு வரியும் (or) மதிப்புகளும் காற்புள்ளி ( , ) யால் பிரிக்கப்பட்டு உள்ளீடு செய்ய வேண்டும்.
- ❖ உள்ளீடு செய்தபின் .CSV என்ற நீட்டிப்பு கூறுடன் சேமிக்கவும்.

எ.கா One, Two, Three<br>
One Two Three

7. Write மற்றும் Append செயற்கூறின் பயன்கள் யாவை?

Write :- புதிய கோப்பினை உருவாக்க உதவுகிறது

- ❖ ஏற்கனவே உருவாக்கப்பட்டிருந்தால் அதே பெயரில் புதிய கோப்பை உருவாக்கும்.
- ❖ பொது வடிவம் CSV Writer (File Object, Delimiter, Tmtparams)

Append : * ஏற்கனவே உருவாக்கிய கோப்பின் இறுதியில் தரவினை சேர்க்கும் (or) புதிய கோப்பை உருவாக்கும்.

ஒரு மதிப்பெண் :–

1. புதிய CSV கோப்பின் புலத்தை பிரிக்க <u>ஒற்றை மற்றும் இரட்டை</u> மேற்கோள்குறி பயன்படுகிறது.

2. CSV கோப்பினை படித்தல் மற்றும் எழுவதற்கு பயன்படும் முறைமை <u>+.</u>



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

**திரு.S.நெடுஞ்செழியன் M.Sc., B.Ed., M.Phil., கணினி ஆசிரியர் (PTA) அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மணலூர்பேட்டை, கள்ளக்குறிச்சி மாவட்டம்.**

3. CSV கோப்பினை படிக்க r முறைமை பயன்படுகிறது.

4. CSV கோப்பினை எழுத w முறைமை பயன்படுகிறது.

5. தனித்துவமான CSV கோப்பினை திறக்க X முறைமை பயன்படுகிறது.

6. வெற்று இடைவெளிகளை நீக்க Skipinitial Space அளபுரு பயன்படுகிறது.

7. CSV கோப்புகளில் உள்ள உறுப்புகளை ஏறுவரிசையில் வரிசைப்படுத்த List – Name Sort ( ) கட்டளை பயன்படுகிறது. இறங்கு வரிசைபடுத்த List Name Sort (Reverse) கட்டளை பயன்படுகிறது.

8. CSV கோப்பின் தரவுகளை ஒரு சமயத்தில் ஒருவரிசை மட்டும் எழுத Writerow ( ) முறைமையும் அனைத்து தரவையும் எழுத Writerows ( ) முறைமையும் பயன்படுகிறது,

9. SVS கோப்பின் இறுதியில் தரவனை சேர்க்க 'a' முறைமை பயன்படுகிறது.

10. பைத்தான் CSV செயற்கூறில் வரிமுறிப்பாக \r, \n பயன்படுகிறது.

11. ஒன்றுக்கும் மேற்பட்ட நெடுவரிசைகளை வரிசையாக்க Itemgetter ( ) பயன்படும்.

12. Close ( ) முறையானது கோப்பின் வளங்களை விடுவிக்கும்.

## பாடம் - 14

## பைத்தானில் C++ நிரல்களை இறக்கம் செய்தல்

1. பைத்தானிற்கும் C++-க்கும் இடையே உள்ள வேறுபாடு கூறுக?

| | **பைத்தான்** | **C++** |
|---|---|---|
| 1. | வரிமொழி மாற்றி மொழியாகும். | தொகுப்பு மொழியாகும். |
| 2. | மாறும் தன்மைக் கொண்டது. | நிலையான தன்மை கொண்டது. |
| 3. | மாறி அறிவிக்கும் போது தரவின் வகையை குறிப்பிட தேவையில்லை | தரவினத்தை குறிப்பிட வேண்டும். |
| 4. | Scripting மற்றும் பொதுப்பயன் மொழி என இரு வகையிலும் செயல்படும். | பொதுப்பயன் மொழியில் மட்டும் செயல்படும். |

2. Scripting மொழி என்றால் என்ன?

- ❖ ஒரு Scripting மொழி என்பது பிறநிரலாக்க மொழிகளுடன் ஒருங்கிணைப்பதற்கும், தொடர்பு கொள்வதற்கும் வடிவமைக்கப்பட்ட ஒரு நிரலாக்க மொழியாகும்.
- ❖ Scripting மொழி HTML ஜாவா (or) C++ மொழிகளுடன் இணைந்து காணப்படும். எ.கா ஜாவாஸ் கிரிப்ட், VB ஸ்கிரிப்ட், PHP, பைத்தான், ASP, TCL



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

3. ஸ்கிரிப்டிங் மற்றும் நிரலாக்க மொழிக்கும் உள்ள வேறுபாடு யாது?

| | ஸ்கிரிப்டிங் | நிரலாக்க மொழி |
|---|---|---|
| 1. | தொகுத்தல் படிநிலை தேவைப்படாது விளக்கம் தேவை. | தொகுத்தல் படி நிலை தேவைப்படும் |
| 2. | வரி மொழிமாற்றித் தேவைப்படுகிறது. | தொகுப்பான் / நிரலபெயர்ப்பி தேவைப்படுகிறது. |

4. Scripting (ஸ்கிரிப்டிங்) மொழியின் பயன்கள் யாவை?

- ஒரு நிரலில் சில செயல்பாடுகள் தானியங்குப்படுத்துதல்.
- தரவு தொகுப்பிலிருந்து தகவலைப் பிரித்தெடுத்தல்.
- குறைந்த நிரல் குறிமுறையைக் கொண்டது.
- சிக்கலான அமைப்புகளை ஒருங்கமைக்க முடியும்.

5. பைத்தானின் பண்புக் கூறுகள் யாவை?

- பைத்தான தேவையற்ற (Garbage) மதிப்புகளைச் சேகரிக்கும் தானியங்கியைப் பயன்படுத்துகிறது.
- மாறக்கூடிய மொழி வகையை சார்ந்தது.
- வரிமொழி மாற்றி மூலம் இயங்குகிறது.
- குறிமுறைகள் அளவு குறைவானது
- தரவினங்களை வெளிப்படையாக அறிவிக்க தேவையில்லை.
- செயற்கூறு எந்த வகை செயலுருப்பையும் ஏற்கும். மேலும் பல மதிப்புகளை திருப்பி அனுப்பும்.

6. C++ நிரலை பைத்தான் மூலம் எவ்வாறு இயக்குவாய்?

1. Min Gw Run-ன் முனையத்தை இரட்டைக் கிளிக் செய்யவும்.
2. பைத்தான் அமைந்திருக்கும் (Python.exe) கோப்பறைக்கு செல்லவும்.
3. C++-ல் இருந்து பைத்தான் கோப்பிற்கு மாற்ற cd < absolute pathy > கிளிக் செய்யவும்.
4. நிரலை நோட்பேடில் தட்டச்சு செய்து Run நீட்டிப்புடன் இரட்டை கிளிக் செய்யவும்.

7. பைத்தானில் கூறுநிலைகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

பைத்தான் கூறு நிலைகள் மூன்று வகைப்படும்.

1. SYS கூறுநிலை மாறிகளுக்கும் வரிமொழி மாற்றிக்கும் அணுகுதலை வழங்குகிறது.
2. OS கூறுநிலை சார்பு செயல்பாட்டுடன் பயன்படுத்துவதற்கு வழிமுறையை வழங்குகிறது.
3. Getopt கூறுநிலை கட்டளை வரி தேர்வுகளையும், செயலுருபுகளையும் பிரித்தெடுக்க செயற்கூறுகளை வழங்குகிறது.



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

திரு.S.நெடுஞ்செழியன் M.Sc., B.Ed., M.Phil., கணினி ஆசிரியர் (PTA) அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மணலூர்பேட்டை, கள்ளக்குறிச்சி மாவட்டம்.

ஒரு மதிப்பெண் :-

3. Getopt கூறுநிலை கட்டளைவரி தேர்வுகளையும் செயலுருபுகளையும் பிரித்தெடுக்க உதவுகிறது.
4. API – Application Programming Interface
5. SWIG – Simplified Wrapper Interface Generator

8. White மடக்கின் மூலம் பயன்படுத்திய எண் பாலிண்ட்ரோமா இல்லையா என்பதை கண்டறியும் C++ நிரலை எழுதுக?

```
# include , <iostream>

using namespace std;

int main ( )

int n, num, digit, rev = 0;

cout << "Enter the number: ";

cin >> num;

n = num;

while (num)

digit = num % 10;

rev = (rev x 10) + digit;

num = num 10;

Cout << rev <<end1;

if (n== rev)

Cout <<The number is a palindrome";

else cout << "The number is not a palindrome return o;
```

ஒரு மதிப்பெண் :-

1. அனைத்து சரங்களும் ஒரே சரமாக இணைக்க "+" OS கூறுநிலை பயன்படும்.

2. தருபிக்கப்பட்ட கூறுநிலையில் செயற்கூறுகளை அணுக ( . ) புள்ளி செயற்குறி பயன்படுகிறது.



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

திரு.S.நெடுஞ்செழியன் M.Sc., B.Ed., M.Phil., கணினி ஆசிரியர் (PTA) அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மணலூர்பேட்டை, கள்ளக்குறிச்சி மாவட்டம்.

## பாடம் - 15

## SQC மூலம் தரவுகளைக் கையாளுதல்

1. தரவு தளம் என்றால் என்ன?

- ❖ தரவு தளம் என்பது ஒருங்கிணைக்கப்பட்ட தரவுகளின் தொகுப்பு ஆகும்.
- ❖ தரவுகள் கணினியில் நார்மலை சேசன் முறையில் வடிவமைப்பு முறையில் சேமிக்கப்படுகின்றன.
- ❖ சேமித்த தரவுகளை SQL மொழியின் மூலம் தேவையான தகவலை பெறமுடியும்.

2. SQLITE பயன்படுத்தி ஒரு தரவுதளத்தை (or) அட்டவணையை எவ்வாறு உருவாக்குவாய்?

- ❖ SQLITE ஒரு எளிய உறவுநிலை தரவுத்தள அமைப்பு ஆகும்.
- ❖ இதில் வேலை செய்வது வேகமாகவும், சோதிப்புத் தன்மையுடையது மற்றும் நெகிழ்வான தன்மை என்பதால் எளிதாக வேலை செய்ய முடியும்.

தரவு தளத்தை உருவாக்கும் முறை :-

- ❖ Sqlite OS-ஐ OS செய்யவும்.
- ❖ Connect ( ) வழிமுறை மூலம் இணைப்பை உருவாக்கி தரவு தளத்தின் பெயரை அனுப்பவும்.
- ❖ Cursor = Connection Cursor ( ) கூற்றின் மூலம் பொருளை அணுகவும்.
- ❖ Curser ஒரு கட்டுப்பாட்டு அமைப்பாகும். இது தரவுத்தளம் பதிவுகளை இணைக்கப் பயன்படுகிறது.
- ❖ அட்டவணையை (or) தரவுதளத்தை உருவாக்க SQC கட்டளை எழுத வேண்டும்.
  Import Sqlite 3
  Connection = Sqlite 3 connect (“School.db”) cursor = connection cursor ( )
- ❖ School என்ற பெயரில் புதிய தரவுதளம் உருவாக்கப்பட்டு (REATE DATABASE SCHOOL) கட்டளைக்கு அனுப்பி உருவாக்கிய தரவு தளத்தை திறக்கும்.
- ❖ School என்ற வெற்று தரவுதளம் உருவாக்கிய பிறகு அட்டவணைகளை சேர்த்து சேர்க்கலாம்.

3. SELECT வினவல் பற்றி விளக்குக?

- ❖ SELECT கூற்று தரவுத்தளத்திலிருந்து தரவைபெற பயன்படுத்தப்படுகிறது.
- ❖ இது SQL-ல் அதிகமாக பயன்படுத்தப்படும் கூற்று ஆகும்.
- ❖ பொது வடிவம்
  “select * from Table – Name”
- ❖ அட்டவணையின் அனைத்து தரவுகளையும் பட்டியலாக ஒரு பொருளில் பெறமுடியும்.
  எ.கா. select * from student mark”



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

திரு.S.நெடுஞ்செழியன் M.Sc., B.Ed., M.Phil., கணினி ஆசிரியர் (PTA) அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மணலூர்பேட்டை, கள்ளக்குறிச்சி மாவட்டம்.

4. SQL-ல் துணைநிலை கூற்றுகள் எத்தனை? அவை யாவை?

SQL-ல் துணைநிலை கூற்றுகள் 5 வகைப்படும். இவை SELECT கூற்றில் பயன்படுத்தப்படுகிறது.

1. DISTINT
2. WHERE
3. GROUP BY
4. ORDER BY
5. HAVING

5. SQL துணைநிலை கூற்று பற்றி விவரி?

❖ SQL-ல் 5 வகையான துணைநிலை கூற்றுகள் SELECT கூற்றில் பயன்படுத்தப்படுகின்றன.

DISTINCT :-

❖ குறிப்பிட்ட நெடுவரிசை (or) அட்டவணையில் உள்ள இரட்டிப்பு மதிப்புகளை தவிர்ப்பதற்கு பயன்படுகிறது.
❖ தனித்த மதிப்புகளை பெறமுடியும்.

பொதுவடிவம் :-

"SELECT DISTINCT FROM Table Name"

எ.கா Cursor execute ("SELECT DISTINT (Mark) from Student Mark")

**WHERE :-**

❖ நிபந்தனைகளை நிறைவேற்றும் பதிவுகளை மட்டுமே பிரித்தெடுக்க WHERE துணைநிலை நிலை கூற்று பயன்படுகிறது.

பொதுவடிவம் :-

"SELECT FROM Table Name Where Condition"

எ.கா SELECT Rank From Student Mark Where Gender = M

**Group By :-**

❖ குறிப்பிட்ட பதிவுகளைச் சுருக்கமான வரிசைகளை கொண்ட குழுவாக மாற்ற பயன்படும்.
❖ ஒன்று (or) அதற்கு மேற்பட்ட நெடுவரிசை குழுக்களாக மாற்ற பயன்படுகிறது.

பொதுவடிவம் :-

"SELECT FROM Table Name Groub by condition"

எ.கா SELECT From Student Mark Groub by Gender



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

திரு.S.நெடுஞ்செழியன் M.Sc., B.Ed., M.Phil., கணினி ஆசிரியர் (PTA) அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மணலூர்பேட்டை, கள்ளக்குறிச்சி மாவட்டம்.

## ORDER BY

- குறிப்பிட்ட புலங்களில் உள்ள தரவுகளை வரிசையாக்க (ஏறு (or) இறங்கு) பயன்படுகிறது.
  எ.கா மாணவர் பெயர்

## HAVING :-

- குழு சார்புகளைப் பொறுத்து தரவுகளை வடிகட்ட பயன்படுகிறது.
- குழு சார்பு Where கூற்றில் பயன்படுத்த முடியாது. எனவே HAVING கூற்றில் பயன்படுத்தப்படுகிறது.
  எ.கா Gender

6. மதிப்பீட்டுச் சார்புகள் என்றால் என்ன? அவற்றின் பயன்கள் யாவை?

மதிப்பீட்டுச் சார்புகள் நெடுவரிசையில் உள்ள மதிப்புகளைக் கொண்டு செயல்பாடுகளைச் செய்து ஒரே ஒரு மதிப்பை விடையாகக் கொடுக்கக்கூடியது.

| | | | |
|---|---|---|---|
| 1. | COUNT ( ) சார்பு | – | அட்டவணையில் உள்ள வரிசைகளின் எண்ணிக்கையை காண உதவுகிறது. |
| 2. | AVG ( ) சார்பு | – | அட்டவணையில் உள்ள வரிசைகளின் சராசரி கணக்கிட உதவுகிறது. |
| 3. | SUM ( ) | – | ஒரு புலத்தில் உள்ள மதிப்புகளை கூட்ட பயன்படுகிறது. |
| 4. | MAX ( ) | – | நெடுவரிசையில் உள்ள பெரிய மதிப்பை காண உதவுகிறது. |
| 5. | MIN ( ) | – | நெடுவரிசையில் உள்ள சிறிய மதிப்பை காண உதவுகிறது. |

ஒரு மதிப்பெண் :-

1. SQL-ன் அனைத்து கட்டளைகளையும் செயல்படுத்த Cursor பயன்படுகிறது.
2. Fetchone செயற்கூறு அடுத்த வரிசையை கொடுக்க பயன்படும்.
3. Fetchall ( ) செயற்கூறு அனைத்து வரிசைகளை பெற உதவுகிறது.
4. Count செயற்கூறில் NULL மதிப்புகளை கணக்கிடாது.
5. SQL-ல் உள்ள இடநிரப்பிகள் 1. கேள்விக்குறி, 2,பெயரிடப்பட்ட இட நிரப்பிகள் (Name)



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

திரு.S.நெடுஞ்செழியன் M.Sc., B.Ed., M.Phil., கணினி ஆசிரியர் (PTA) அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மணலூர்பேட்டை, கள்ளக்குறிச்சி மாவட்டம்.

## பாடம் - 16

1. தரவு காட்சிப்படுத்தின் வகைகள் எத்தனை? யாவை?

6 வகைப்படும்.

1. வரைபடங்கள் (Charts)
2. அட்டவணைகள் (Tables)
3. வரைகலை (Graphs)
4. நிலப்படங்கள் (Maps)
5. இன்போகிராபிக்ஸ் (Infographics)
6. டேஷ்போர்ட் (Dashboards)

2. தரவு காட்சிப்படுத்தலின் பயன்கள் யாவை?

❖ பயனர்கள் தரவுகளை எளிதாக கூர்ந்து ஆய்வு செய்யவும் உட்பொருளை வெளிப்படுத்தவும் உதவுகிறது.
❖ சிக்கலான தரவுகளை புரிந்துக் கொண்டு அவற்றை பயன்படுத்திக் கொள்ள வழி செய்கிறது.
❖ தரவுமாரிகளுக்கு இடையே உள்ள உறவு நிலையை காண உதவுகிறது.

3. விளக்கு 1. இன்போகிராபிக்ஸ் 2. டேஷ்போர்ட்

(Infographics) (Dashboards)

1. இன்போகிராபிக்ஸ் :-

❖ தகவலை வரைகலையாக உருவமைக்க பயன்படுகிறது.

2. டேஷ்போர்ட் :-

❖ அனைத்து வளங்களையும் ஒன்றுபட்ட ஒற்றை காட்சி திரையில் காண உதவுகிறது.
❖ தரவுகளை காட்சிப்படுத்த உதவுகிறது.
❖ சிக்கலான மற்றும் எளிய கருத்துகளை காட்சி முடிவில் காண உதவுகிறது.

4. குறிப்பு வரைக :-

1. ஸ்கேட்டர் வரைவிடம்?

2. பெட்டி வரைவிடம்?

1. ஸ்கேட்டர் வரைவிடம் :-

❖ தரவுகளை புள்ளிகளின் தொகுப்பாக காட்டுகிறது.
❖ புள்ளியின் நிலை அதன் 2D-ஐ பொருந்து கிடைமட்ட (or) செங்குத்து பரிமானத்தை குறிக்கும்.



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

2. பெட்டி வரைவிடம் :-

- ❖ சிறிய முதல்கால்மானம், சராசரி, மூன்றாம் கால்மானம் மற்றும் பெரிய ஆகிய 5 எண்களின் திரட்டை கொண்டு தரவுகளின் பகிர்வை காட்டுகிறது.

5. குறிப்பு வரைக வட்ட வரைபடம்?

வட்ட வரைப்படம் :-

- ❖ இது ஒரு பொதுவான விளக்கப்பட வகையாகும்.
- ❖ வட்ட வடிவில் தோன்றும்
- ❖ எண் விகிதத்தை விளக்கும் விதத்தில் துண்டுகளாக பிரிக்கப்பட்டிருக்கும்.
- ❖ இதில் உள்ள துண்டுகள் முழுபடத்துடன் உள்ள உறவை வெளிக்காட்டும்.

6. ஹிஸ்டோகிராம் மற்றும் பட்டை வரைபடங்களுக்கு இடையே உள்ள வேறுபாடு யாது?

| | ஹிஸ்டோகிராம் | பட்டை வரைபடம் |
|---|---|---|
| 1. | எண் வகை தரவுகளுக்கு இடையே அதிர்வெண் பட்டை வடிவ வன படத்தில் காட்டும். | பல்வேறு வகையான தரவுகளை ஒப்பிட பயன்படுகிறது. |
| 2. | மாறிகளுக்கும் தொடருக்கும் இடையேயான அதிர்வெண் பகிர்வை காண்பிக்கும். | வெவ்வேறான மாறிகளை ஒப்பிடும் படத்தை காண்பிக்கும். |
| 3. | இடைவெளி இல்லை | முறையான இடைவெளி உண்டு. |
| 4. | தரவுகளின் தொடர்பை வெளிப்படுத்த ஒன்றாக வகைப்படுத்தப்பட்டிருக்கும். | தரவுகள் தனி உறுப்பாக கருதப்படும். |
| 5. | இரங்கு வரிசையில் மதிப்பை வெளிப்படுத்தும் | ஏறு வரிசையில் மதிப்பை வெளிப்படுத்தும். |
| 6. | அகலம் ஒரே அளவில் இல்லை | ஒரே அளவில் இருக்கும். |

ஒருமார்க் :-

1. <u>பட்டை வரைபடம்</u> மற்றும் <u>ஹிஸ்டோக்ராம்</u> ஆகிய இரண்டும் தரவுகளை படவடிவில் காண்பிக்க உதவும்.

**அனைத்து மாணவர்களும் தேர்வில் வெற்றிப்பெற வாழ்த்துக்கள்.**
**விடாமுயற்சி கடும் பயிற்சி வெற்றி**

**திரு.சா.நெடுஞ்செழியன், M.Sc., B.Ed., M.Phil.,**
**Cell : 9788668426**



Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com